[1971 ஜூலை 19

இளம் பெண்களைப் போட்டால் வெளிநாட்டினருக்குச் சொல்லிக் கொடுக்க வசதியாகயிருக்கும். இதை அரசாங்கம் கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவரவர்களே, மகாபலிபுரத்தைப் பொறுத்த வரையில் நல்ல அளவிற்குக் கைடுகள் இங்கிருந்து போகிறார்கள், அதிலே குறை இல்லை. பார் அட்டாச்ட் ஹோட்டல் என்று சொன்னார்கள். அது சென்னைக்கு வருகிற வெளிநாட்டுப் பயணிகளுக்கு இங்கே நல்ல அளவில் தேவையான பர்மிட்டுகள் கொடுக்கப்படுவதால் வெளிநாட்டுப் பயணிகளைப் பொறுத்த வரையில் அதிலே சங்கடங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. உள்நாட்டுப் பயணிகளுக்கு எப்படி என்று தெரியவில்லை, ஸ்விம்மிங் பூல் போன்றவைகளையும், மற்றவைகளையும் ஏற்பாடு செய்ய அரசு திட்டங்களைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கேள்வியும் இது சம்பந்தமுடையதுதான், அதையும் எடுத்துக் கொள்ளலாம்.

சென்னை-மாமல்லபுரம் கடற்கரை

* 315 வினா—திரு. சு. துரைசாமி:

திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரை உள்ள கடற்கரை ஓரங்களில் அழகுபடுத்தும் முறையில் பூக்கள் வைத்து பராமரிக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள முட்டுக்காடு என்ற கடற்கரை கிராமத்திலிருந்து மகாபலிபுரம் கடற்கரை வரை பலவகை மரங்கள் வைத்து கடற்கரையை அழகு செய்யும் செயத் குறிப்பு ஒன்று அரசினுடைய ஆலோசனையிலிருந்து வருகிறது. இதற்காக எவ்வளவு செலவாகும், எவ்வகையில் கடற்கரையை அழகுபடுத்தலாம் என்ற விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலே இருந்து மகாபலிபுரம் வரையில் கடற்கரையை அழகுபடுத்தினால் பலர் வந்து நம்முடைய நாட்டுக் கடற்கரையைப் பார்ப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும். அதேநேரத்தில் வெளிநாட்டிலேயிருந்து வருபவர்கள் தங்குவதற்கு சுற்றுலா மாளிகைகளை இடையிடையே அமைக்க ஏதாவது திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவரவர்களே, முட்டுக்காட்டிலிருந்து மகாபலிபுரம் வரையில் ஒரு அழகிய கடற்கரை, நம்முடைய கிழக்கு வங்கக் கடற்கரை இருக்கிறது என்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

1971 ஜூலை 19]

இதை அபிவிருத்தி செய்வதில் இரண்டு முறைகள் இருக்கின்றன. ஒன்று, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அங்கே கொண்டு வந்து அந்தக் கடற்கரையிலே உட்கார வைத்து உல்லாசப் பயணத்திற்கு ஏற்பாடு செய்வதா? அல்லது வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் வகையில் அழகுபடுத்துவதா என்பது இரண்டு. பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்தவர்கள் வந்திருந்தார்கள், அவர்கள் முட்டுக் காடு, கோவளம் தடங்கள் சிலவற்றைப் பார்த்து விட்டு அதை அழகு படுத்தலாம் என்ற திட்டத்தைத் தந்து அதற்காக எல்லா ஒத்துழைப்பையும் தருவதாக பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏர்-இந்தியா நிறுவனமும் அதற்கு ஒத்துழைப்புத் தருவதாகத் தெரிவித்து இருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, மகாபலிபுரத்தில் தற்போதிருக்கும் கோயில்களைப்போல் 6 கோயில்கள் கடலிலே மூழ்கிப் போயிருப்பதாகச் சொல்லப்படுகிறதே. அது உண்மையா இல்லையா என்ற ஆராய்ச்சியில் நம்முடைய அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய தனிக் குறிப்பு என்னிடத்தில் இல்லை என்றாலும், தற்பொழுது வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் மகாபலிபுரத்தைப்பற்றி கடலுக்குள்ளே மூழ்கி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மூலம் செய்தியறிந்து இந்தச் சபைக்குத் தெரிவிக்க முயற்சி செய்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, போகும் வழியில் திறந்த வெளிக் கலையரங்கம் ஒன்று இருக்கிறதே, அதில் வசதிகளைச் செய்து ஊட்டியிலே நடத்துவதைப் போல் கலை விழாக்கள் நடத்துவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: நல்ல யோசனை. ஏற்றுக் கொள்ளத் தகுந்தது.

திரு. சோ. கருணாநிதன்: தலைவரவர்களே, மகாபலி புரத்திற்குச் செல்ல விரும்பும் சுற்றுலாப் பயணிகளுக்குப் போக்குவரத்து வசதியை, சென்னை மாநகரத்திலிருந்து விருப்பம் போல் போய்வர, கடற்கரையை யொட்டி மின்சார இரயில்பாதை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவரவர்களே, மகாபலிபுரத்திற்கு ஏராளமான வண்டிப் போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சுற்றுலாப் பயணிகளுக்கான வண்டிகள் நிறையக் கிடைக்கின்றன என்பதாகத்தான் தெரிகிறது. அரசும் போக்குவரத்துத் துறையின் மூலம் பல வசதிகளைச் செய்திருக்கிறது. மின்சார இரயில் பாதை பற்றிய விஷயம் மத்திய சர்க்காரிடம் கேட்க வேண்டிய கேள்வி.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, சென்னை கடற்கரைக்கும் மகாபலிபுரம் கடற்கரைக்கும் இடையில் கள்ளக்கடத்தல் அதிகமாக நடப்பதாகப் பலரும் பேசிக் கொள்கிறார்கள். அப்படி அந்தக் கள்ளக் கடத்தல் நடப்பதைத் தடுக்க இந்தக் கடற்கரையை முன்னேற்றுவது நல்லது. அந்த நல்ல திட்டம் பற்றி அரசு ஆராயுமா? என்ன திட்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக் கடத்தல் பம்பாய் கடற்கரை யோரத்தில் நடப்பதாகத் தான் அடிக்கடி பத்திரிகை வாயிலாக அறிந்திருக்கிறேன். சென்னைக் கருகில் நடப்பதாகக் கேள்விப்படவில்லை, அப்படிப்பட்ட தகவல் எதுவும் அரசுக்கு இல்லை.

தனியார் பேருந்துகளில் வானொலிப் பெட்டிகள்

* 316 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் துறை பஸ்களில் ரேடியோக்களை வைக்கக் கூடாதென அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) பயணிப் பேருந்துகளில் அல்லது ஒப்பந்தப் பேருந்துகளில் வானொலிப் பெட்டிகளை உபயோகிக்கக் கூடாது என்று அரசு ஆணைகள் எதுவும் பிறப்பிக்கவில்லை எனினும், பயணிப் பேருந்துகளிலும், ஒப்பந்தப் பேருந்துகளிலும் வானொலிப் பெட்டிகளை நிறுவுவது அனுமதிக்கக் கூடாது என்று, சென்னை போக்குவரத்து ஆணையாளர் 1958-ஆம் ஆண்டில் எல்லா வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்கும் ஆணைகள் பிறப்பித்துள்ளார்.

(இ) வானொலிப் பெட்டியிலிருந்து எழுகிற இசையில் ஆழ்ந்து வலவரின் கவனம் வேறு பக்கம் திருப்பப்படாமலும், பாதுகாப்பான முறையில் வண்டியோட்டுவதற்கு அவர்கள் விழிப்புடன் இருக்கவும் வகை செய்வதற்காகவே இந்த ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பேருந்துகளில் பயணம் செய்யும் பிரயாணிகளின் அலுப்பினைப் போக்குவதற்காக இனிமேலாவது அத்தகைய வண்டிகளில் வானொலிப் பெட்டிகளை அமைத்திட ஆவன செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அலுப்பினைப் போக்குவதை விட உயிரைக் காப்பாற்றுவதே மேல் என்ற காரணத்தினால் வானொலிப் பெட்டிகள் வைக்க உத்தேசமில்லை.